©
GOVERNMENT OF TAMIL NADU
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 338] CHENNAI, TUESDAY, NOVEMBER 9, 2010
Aippasi 23, Thiruvalluvar Aandu–2041

## Part VI—Section 2

**Notifications or Orders of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

COLLECTORS AND LOCAL AUTHORITIES

**தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர்.**

**தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை கிராம ஊராட்சித் தலைவர் பதவி நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(ந.க. எண் 1839/2010/அ3.)*

**No. VI(2)/509(b)/2010.**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், வெட்டுவாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி நா. கலைச்செல்வி என்பவர் அவ்வூராட்சியின் நிர்வாக அலுவலர் என்ற முறையில் செயல்படும்போது ஊராட்சியில் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக ஆய்வில் கண்டறியப்பட்டு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205—ன்கீழ் அன்னாருக்கு விளக்கம் கோரும் அறிவிப்பு வழங்கப்பட்டது.

ஊராட்சி மன்றத் தலைவர் அவர் மீதான குற்றச்சாட்டுகளுக்கு தனித்தனியே தனது விளக்கத்தினை அளித்துள்ளார். ஊராட்சி மன்றத் தலைவர் மீதான குற்றச்சாட்டுகள் அவற்றிற்கு அவர் அளித்துள்ள விளக்கங்கள் அலுவலக ஆவணங்கள் ஆகியன விதிமுறைகளுடன் ஆய்வு செய்யப்பட்டு விளக்கங்கள் ஏற்கக்கூடியதாக இல்லை. எனவே, 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 205 (2)—ன்படி வெட்டுவாக்கோட்டை கிராம ஊராட்சித் தலைவர் திருமதி நா. கலைச்செல்வி என்பவரின் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைகேடுகள் தொடர்பாக அவரை வெட்டுவாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டு, இதுகுறித்து அந்த கிராம ஊராட்சியின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக வெட்டுவாக்கோட்டை கிராம ஊராட்சி உறுப்பினர்களின் கூட்டத்தினை அவ்வூராட்சி மன்ற அலுவலகத்தில் நடத்திட ஒரத்தநாடு வட்டாட்சியருக்கு உத்தரவிடப்பட்டது.

அதனைத்தொடர்ந்து ஒரத்தநாடு வட்டாட்சியரால் 30—07—2010 அன்று நடத்தப்பட்ட வெட்டுவாக்கோட்டை ஊராட்சியின் கூட்டத்தில் ஊராட்சி மன்றத் தலைவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு அன்னார் அளித்துள்ள விளக்கங்கள், ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளர் அவர்களின் யோசனை ஆகியவற்றை முன்வைத்து ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்துகள் கேட்கப்பட்டதில் கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களும் ஊராட்சி மன்றத்தலைவர் அளித்துள்ள விளக்கங்களை ஏற்றுக்கொள்வதாகவும், ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்யும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் யோசனையை நிராகரித்தும் கருத்து தெரிவித்திருந்தனர்.

குற்றச்சாட்டுகள், அவற்றிற்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கங்கள் மற்றும் வெட்டுவாக்கோட்டை ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. ஊராட்சியின் செயல் அலுவலராகிய ஊராட்சி மன்றத் தலைவர் தனது கட்டாய மற்றும் அடிப்படை கடமைகளிலிருந்து தவறி துணை செலவு சீட்டுகள் இல்லாமலும், மதிப்பீடு மற்றும் அளவுபுத்தகம் எழுதாமலும், அரசினால் ஊராட்சி வளர்ச்சிக்கு வழங்கப்படும் நிதிகளில் முறைகேடுகள் செய்தும் அரசு விதிமுறைகளை மீறி மிகைச்செலவினங்கள் செய்தும், முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளதும் உறுதியாகிறது. எனவே, இது குறித்த ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் கருத்து ஏற்றுக்கொள்ள இயலாதநிலையில்,

19–08–2009 தேதிய சென்னை உயர்நீதிமன்ற முழு நடுவர் ஆயத்தின் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையின்படி, வெட்டுவாக்கோட்டை ஊராட்சி மன்றத்தின் கருத்துகளுக்கு மாறாக, ஊராட்சி மன்றத் தலைவரை பதவி நீக்கம் செய்ய வேண்டிய அவசியத்தின் காரணங்களை ஊராட்சி மன்றத் தலைவர் திருமதி நா. கலைச்செல்வி என்பவருக்கு மறு விளக்கம் கோரும் அறிவிப்பு வழி தெரிவித்து 27–09–2010 அன்று சார்வு செய்யப்பட்டு அதற்கு ஊராட்சி மன்றத் தலைவர் தனது முந்தைய விளக்கத்தையே மீண்டும் சமர்ப்பித்துள்ளார்.

அன்னார்மீது பிறப்பிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கான ஊராட்சி மன்றத் தலைவரின் விளக்கங்கள், ஒரத்தநாடு வட்டாட்சியரால் நடத்தப்பட்ட சிறப்புக் கூட்டத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் மற்றும் ஊராட்சிகளின் ஆய்வாளரின் முடிவு ஊராட்சி மன்றத்தின் கருத்திற்கு மாறுபட்ட நிலையில் ஊராட்சி மன்றத் தலைவர் சமர்ப்பித்த மறுவிளக்கம் ஆகியவை உளத்தேர்வின்படி கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அன்னாரை வெட்டுவாக்கோட்டை ஊராட்சி மன்றத் தலைவர் பதவியிலிருந்து நீக்கம் செய்து ஆணையிடப்படுகிறது.

இவ்வாணை குறித்த அறிவிக்கை 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 262(1)–ன்படியும், சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசு முதன்மைச் செயலர் அவர்களின் கடித ந.க. எண் 3205/ப.ரா.4/2010–1, நாள்: 01–03–2010 தேதிய அறிவுரைகளின்படியும் ***தமிழ்நாடு அரசிதழில்*** சிறப்பு வெளியீடாக வெளியிடப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும் என தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூர்,
2010, நவம்பர் 2.

**ம.க. சண்முகம்,**
*மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்*
*ஊராட்சிகளின் ஆய்வாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.